**<u>சார்பு நீதிமன்றம், துறையூர்.</u>**

**முன்னிலை.திரு.C.விஜய்கார்த்திக்,M.A.,M.L.,**
**சார்பு நீதிபதி,**
**துறையூர்.**

**<u>OS.No.27/2024</u>**

தேதி: 13.11.2025

பெயர் : ராமராஜ் (வா.சா.1) த/பெ: கிருஷ்ணன்

**<u>குறுக்குவிசாரணை</u>**

1. பிரதிவாதி குமார் எனக்கு 10 வருடமாக பழக்கம் என்றால் சுமார் 5 முதல் 6 வருடங்களாக பழக்கம். விவசாய நிலம் 2 ஏக்கர் இருந்து 1 ஏக்கரை விற்றுவிட்டேன். தற்போது எனக்கு 1 ஏக்கர் உள்ளது. 1 ஏக்கர் நிலத்தை எப்போது விற்றேன் என்றால் 10 வருடங்களுக்கு முன்பு விற்றேன். என் மகளுக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் 10 வருடம் இருக்கும். 1 ஏக்கரில் நிலத்தில் வரும் விவசாய வருமானம் தான் எனக்கு உள்ளது என்றால் சரிதான். என் மனைவி மளிகைக்கடைக்கு வேலைக்கு செல்கிறார். பிரதிவாதி என்னிடம் ரூ.4,00,000/- எப்போது கடன் கேட்டார் என்றால் சித்திரை மாதம் 2022ம் வருடம் கேட்டார். அப்போது என்னிடம் பணம் இல்லை. பணம் கேட்டு பிரதிவாதிக்கு எவ்வளவு நாட்கள் கழித்து கொடுத்தேன் என்றால் 12.06.2022ல் கொடுத்தேன். ரூ.4,00,000/-த்தை உறவினர் மூலமாக வாங்கி கொடுத்தேன் என்றால் இரண்டு மயித்துனர்களும் ஆளுக்கு ரூ.1,50,000/- கொடுத்தார்கள், என் மனைவி ரூ.1,00,000/- கொடுத்தார். மேற்படி பணத்தை வீடு கட்டுவதற்காக எனக்கு கொடுத்தார்கள். அந்த பணத்தை தான் நான் பிரதிவாதிக்கு கொடுத்தேன். மேற்படி விவரத்தை நான் வழக்குரையில் கூறவில்லை என்றால் சரிதான்.

2. ரூ.4,00,000/-த்தை எங்கு வைத்து கொடுத்தேன் என்றால் துறையூர் பேருந்துநிலையம் அருகில் உள்ள முருகேசன் பழக்கடையில் வைத்து கொடுத்தேன். சுமார் 11.00 மணிக்கு கொடுத்தேன். ரூ.4,00,000/-த்தை ரூ.500/- நோட்டுக்கட்டுகளாக கொடுத்தேன். ரூ.20,000/- மேல் ஒருவருக்கு பணம் கொடுத்தால் அதை வருமான வரி கணக்கில் காட்ட வேண்டும் என்றால் எனக்கு அந்த விவரம் தெரியாது. ரூ.100/-க்கு ரூ.2 வட்டி வீதம் பிரதிவாதிக்கு கடன் கொடுத்தேன். பிரதிவாதி எத்தனை மாதம் வட்டி கொடுத்தார் என்றால்

பணம் கொடுத்த பிறகு பிரதிவாதியை என்னால் பார்க்க முடியவில்லை. வழக்கு பிராதில் பிரதிவாதியிடம் நான் நேரில் பணம் கேட்டேன், அவர் தரவில்லை என கூறியிருந்தால் அது பொய் என்றால் சரிதான். பிரதிவாதியை என்னால் நேரில் பார்க்க முடியவில்லை. வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு நான் அனுப்பிய அறிவிப்பு அவருக்கு சார்வாகவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு அவருக்கு கிடைக்காததால் தான் அவர் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி எனக்கு 10 வருடமாக பழக்கம், 2018 வருடம் ஜீன் மாதம் ரூ.1,00,000/-கடன் வாங்கியிருந்தார் என்றால் சரியல்ல. கடன் கொடுக்கும்போது பூர்த்தி செய்யப்படாத 5 புரோநோட்டில் கையெழுத்து போட்டுக்கொடுத்தால் தான் கடன் கொடுப்பேன் என கூறியதால் அவர் கொடுத்த புரோநோட்டில் ஒரு புரோநோட்டை பயன்படுத்தி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. முருகேசன் பழக்கடையில் எந்த இடத்தில் வைத்து தாவா புரோநோட்டு எழுதப்பட்டது என்றால் கடைக்கு உள்ளே வைத்து எழுதப்பட்டது. அந்த புரோநோட்டை பிரதிவாதி தான் வாங்கி வந்தார். பிரதிவாதி என்னிடம் ரூ.1,00,000/- கடன் வாங்கியுள்ளார் எனவும், அதிகப்படியான பணம் அவரிடம் பறிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் பூர்த்தி செய்யப்படாத புரோநோட்டில் உள்ள பிரதிவாதியின் கையெழுத்தை வைத்து நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

(ஒம்)/-C.விஜய் கார்த்திக்,
சார்பு நீதிபதி,
துறையூர்.

**<u>சார்பு நீதிமன்றம், துறையூர்.</u>**

**முன்னிலை.திரு.C.விஜய்கார்த்திக்,M.A.,M.L.,**
**சார்பு நீதிபதி,**
**துறையூர்.**

**<u>OS.No.27/2024</u>**

தேதி: 13.11.2025

பெயர் : ஜெயபால் (வா.சா.2) த/பெ: மாயதேவர்

<u>குறுக்குவிசாரணை</u>

1. வாதி என் நண்பர் ஆவார். என்னுடைய பிரமாண வாக்குமூல சங்கதிகளை நான் சொல்லி தான் வழக்கறிஞர் தயார் செய்து தாக்கல் செய்தார் என்றால் சரிதான். எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தமிழ் படிக்க தெரியும். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் தாவா புரோநோட்டில் பிரதிவாதி வாதி கையெழுத்து செய்த பிறகு தான் நான் முதல் சாட்சியாக கையெழுத்து செய்தேன் என கூறியுள்ளேன் என்றால் சரிதான். புரோநோட்டில் வாதி கையெழுத்து செய்தாரா என்றால் இல்லை. பிரதிவாதி கையெழுத்து செய்தார். புரோநோட்டு முருகேசன் பழக்கடையில் வைத்து காலை 11.00 மணிக்கு எழுதப்பட்டது. பணம் கொடுக்கும்போது நான் இருந்தேன். பணம் ரூ.500/- நோட்டுக்கட்டுகளாக 8 கட்டுகள் கொடுத்தார். எனக்கு ராமராஜ் பழக்கம் என்பதால் அவருக்கு அனுசரணையாக நீதிமன்றத்தில் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் பணம் கொடுக்கவில்லை எனவும், புரோநோட்டு எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

(ஒம்)/-C.விஜய் கார்த்திக்,
சார்பு நீதிபதி,
துறையூர்.

**சார்பு நீதிமன்றம், துறையூர்.**

**முன்னிலை.திரு.C.விஜய்கார்த்திக்,M.A.,M.L.,**
**சார்பு நீதிபதி,**
**துறையூர்.**

**OS.No.27/2024**

தேதி: 13.11.2025

பெயர் : முருகேசன் (வா.சா.3) த/பெ: ராஜப்பன்

**குறுக்குவிசாரணை**

1. தாவா புரோநோட்டில் சாட்சி கையெழுத்து நான் 12.06.2022ம் தேதி போட்டேன். ராமராஜ் எனக்கு பழக்கமானவர். காலை சுமார் 11.00 மணிக்கு புரோநோட்டு எழுதப்பட்டது. தாவா புரோநோட்டில் எழுதியவர் என்றவர் இடத்தில் கையெழுத்து மட்டும்தான் உள்ளது, விலாசம் இல்லை என்றால் சரிதான். ராமராஜ் பழக்கம் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சி அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் பணம் கொடுக்கவில்லை எனவும், புரோநோட்டு எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

(ஒம்)/-C.விஜய் கார்த்திக்,
சார்பு நீதிபதி,
துறையூர்.